நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் : 27 /05/2026

## சாதரணக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரண கூட்டம் எதிர்வரும் 2026ம் வருடம் ஜூன் மாதம் 02 தேதி செவ்வாய் கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண். 1**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களிள் செயல்முறை உத்திரவு ந.க.எண் அ8/3991/2022 நாள் 19.12.2022 ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022-23 ன் கீழ் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 1 கொண்டபையன் பட்டியில் நன்மைகூடம் அமைத்து தண்ணீர் வசதி மேற்கொள்ளுதல் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி இந்நகராட்சி மூலம் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நன்மைக்கூடத்திற்கு மின் இணைப்பு பெற வேண்டி, உதவி மின் பொறியாளர் விநியோகம் துனை மின் நிலையம் , விக்கிரமசிங்கபுரம் அவர்களின் கடிதம் எண் 65/2025-26 நாள் 05.03.2026 ன் படி, வரப்பெற்ற கேட்புத்தொகை ரூ. 19250/- மட்டும் இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண் 1096/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி, மேற்கண்ட கேட்புத் தொகை ரூ.19250/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்த மன்ற அனுமதியினை எதிர்நோக்கி , நகர்மன்ற தலைவர்அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 783 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 2**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் ,அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 20383/2022/H2 நாள் 27.02.2026 ன் படி, 2 விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் வயது முதிர்ந்த ,நோய் வாய்ப்பட்ட, கைவிடப்பட்ட விலங்குகள் பராமரிப்புக்கூடம் அமைக்கும் பொருட்டு, பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரபடி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண் 166/2025/இ1)

| வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | கால்நடை பராமரிப்பு துறை நிதி | 15வது நிதிக்குழு மான்யம் | நகராட்சி பங்குத் தொகை |
|---|---|---|---|---|
| விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் வயது முதிர்ந்த ,நோய் வாய்ப்பட்ட, கைவிடப்பட்ட விலங்குகள் பராமரிப்புக்கூடம் அமைத்தல் | 46.00 இலட்சம் | 15.28 இலட்சம் | 23.87 இலட்சம் | 6.85 இலட்சம் |

**அலுவலகக்குறிப்பு**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ன் படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ள மேற்கண்ட விலங்குகள் பராமரிப்பு கூடம் அமைக்கும் பணி மேற்கொள்ளவும், அதற்காக ஒதுக்கப்பட்ட திட்ட நிதி தொகை ரூ.39.15 ( கால்நடை பராமரிப்பு துறை நிதி மற்றும் 15வது நிதிக்குழு மான்யம் ) இலட்சம் அரசின் நிதி ஒதுக்கீடு தொகை போக நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ. 6.85 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்யவும் , ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 784 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 3</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள 11 எண்ணம் சமுதாய கழிப்பிடம் மற்றும் 3 எண்ணம் பொது கழிப்பிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் , வர்ணம் பூசும் பணி மேற்கொள்ள வேண்டி, ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 716 நாள் 17/10/2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 10/03/2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள கழிப்பிடங்களில் பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ.8.00 இலட்சம்) ந.க.எண் 1678/ 2025 /இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.28% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.50% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.28% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி , நகர்மன்ற தலைவர்அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 765 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 4</u>**

21வது உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கையின் படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2025-26 ன் கீழ் ரூ. 67.00 இலட்சம் மதிப்பீட்டில், வார்டு எண் 5 மற்றும் 18 சன்னதி தெரு பகுதியில் சுமார் 670 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு,அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் பணிகள் மேற்கொள்ள 18.06.2025 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி 99 சதவிகிதம் முடிவுற்றுள்ளது. வடிகால் அமைக்கும் பணியில் மழைநீர் செல்லும் வாட்டத்திற்கு ஏற்றாற் போல் , பணி மேற்கொள்ளும் போது, ஒரு பகுதியில், அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2013 – 14 ன் கீழ் கட்டப்பட்ட பழைய பயன்பாடற்ற படிப்பக கட்டிடத்தின் ஒரு பகுதி , மழைநீர் வடிகாலின் உள் பகுதியில் இடையூராக அமையப்பெற்றுள்ளதால், மழைநீர் சீராக செல்ல இயலாத நிலையில் இடையூராக அமையப்பெற்றுள்ளது. எனவே மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை முழுமையாக செய்து முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இடையூராக அமையப்பெற்ற மேற்படி படிப்பக கட்டிடம், அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2013 -14 ன் கீழ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் அ8/2412/2013 நாள்

05.08.2013 கீழ் ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடமாகும். இக்கட்டிடத்தின் ஒரு பகுதியானது மழைநீர் வடிகாலின் உள்ளே அமையப்பெற்றுள்ளதால், மழைநீர் மற்றும் கழிவு நீர் அப்பகுதியில் தேங்கி, அக்கட்டிடத்தின் அடிபகுதி முற்றிலுமாக அரிப்பு ஏற்பட்டு, சேதமடைந்து எந்த நேரத்திலும் இடிந்து விழும் நிலையில் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது அதி கன மழை நேரத்தில், சன்னதி தெரு பகுதியில் , மழைநீர் நீர் சீராக செல்ல வழி இல்லாத காரணத்தினாலும், வடிகால் திரும்பும் மைய பகுதியில் இக்கட்டிடத்தின் ஒரு பகுதி இடையூராக அமையப்பெற்றுள்ளதாலும், மழைநீர் தேங்கி அதன் அருகாமையில் உள்ள குடியிருப்புக்குள் புகும் அபாயம் ஏற்படுவதோடு, மழை வெள்ள நீர், பாபநாசம் மெயின்ரோட்டிற்குள் புகுந்து போக்குவரத்து நெரிசல் மற்றும் இதர அசௌகரியம் ஏற்படுவதோடு அப்பகுதியில் அருகாமையில் உள்ள சுமார் 320 குடியிருப்புகளுக்குள் புகும் அபாயம் ஏற்பட்டு வருகிறது எனவே அப்பகுதியில் வாழும் சுமார் 320 குடியிருப்பு வாசிகள் , பொது மக்கள் நலன் மற்றும் பாதுகாப்பினை கருத்திற்கொண்டும், மழை வெள்ள காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் பொருட்டும், மழைநீர் வடிகாலின் மேல் பகுதியில், மழை வெள்ள நீர் சீராக செல்ல முடியாத அளவிற்கு இடையூராக அமையபெற்றுள்ள பழைய பயன்பாடற்ற படிப்பக கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தவும், அற்கான அனுமதியினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

பொதுமக்களின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதியும், அரசு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணியினை முழுமையாக முடித்து பொது மக்கள் பயன் பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்பதின் அவசியம் கருதியும், மழைநீர் வடிகாலின் மேல் பகுதியில், மழை வெள்ள நீர் சீராக செல்ல முடியாத அளவிற்கு இடையூராக அமையபெற்றுள்ள பழைய பயன்பாடற்ற படிப்பக கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த முறையாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம், (ந.க.எண் 165/2024/இ1)

**தீர்மான எண் : 786 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 5</u>**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் ,அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 399/2025/SS-18 நாள் 07.1.2026 ன் படி, 2025-26 ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (Turip) திட்டத்தின் கீழ் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் சிதிலமடைந்த சாலைகளை மேம்பாடு செய்யும் பொருட்டு ரூ. 362.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்காக ஒதுக்கப்பட்ட திட்ட நிதி தொகை ரூ.362.00 இலட்சம் அரசின் நிதி ஒதுக்கீடு தொகை போக நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ. 31.80 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்ட நிலையில், பொது நிதியில் இருந்து ஈடு செய்ய மன்ற தீர்மான எண் 749 நாள் 30.01.2026 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 2188/2025/எஸ்எஸ்1-139 நாள் 26.03.2026 ன் படி , மேற்கண்ட பொது நிதித் தொகை ரூ. 31.80 இலட்சத்தினை , பொது நிதிக்கு பதிலாக நகராட்சியில் சொத்துவரியின் கீழ் வசூல் செய்யப்படும் நூலக நிதியின் கீழ் ஈடு செய்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நூலக நிதியில் இருந்து ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண் 1129/2025/இ1)

அலுவலகக்குறிப்பு

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ன் படி 2025-26 ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (Turip) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட திட்ட நிதி தொகை ரூ.362.00 இலட்சம் அரசின் நிதி ஒதுக்கீடு தொகை போக நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ. 31.80 இலட்சத்தினை , நகராட்சியில் வசூல் செய்யப்படும் சொத்துவரியின் கீழ் உள்ள நூலக நிதியின் கீழ் ஈடு செய்துக்கொள்ள , நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை

அவர்களின் கடிதம் ந.க.எண் 2188/2025/எஸ்எஸ்1-139 நாள் 26.03.2026 ன் படி அறிவுறுத்தப்பட்டதின் படி நகராட்சி மூலம் ஈடு செய்துக்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 787 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 6 788**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளுக்கும் இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்திற்காக இந்நகராட்சி மூலம் குடிநீர் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு, அதனை பராமரிப்பும் செய்து வருகிறது. மேற்கண்ட பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு 2026-27 ம் ஆண்டுக்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட விவரபடியான மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இ-ருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

1. வார்டு எண் 1 முதல் 10 வரையுள்ள வார்டுகளில் குடிநீர் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் - ரூ. 5.00 இலட்சம்
2. வார்டு எண் 11 முதல் 21 வரையுள்ள வார்டுகளில் குடிநீர் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் - ரூ. 5.00 இலட்சம்

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக, பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும்,, செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 788 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி காரையார் சின்ன மயிலாறு பகுதியில் ,காணி மக்கள் பயன்பாட்டிற்காக தாமிரபரணி ஆற்றின் குறுக்கே , புதியதாய இரும்பு பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள, சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் , நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, நிர்வாக அனுமதியும் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் இரும்பு நடை பாலத்திற்கு, கிழக்கு பகுதியில் அனுகு பாதை மற்றும் தடுப்பு சுவர் அமைப்பதற்கும் மற்றும் பாலத்தின் மேற்பகுதியில் ஒரு பக்க கைப்பிடி (Handrail) அமைப்பதற்கும், திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட வில்லை. மேற்கண்ட பணிகள் செய்தால் தான், இரும்பு பாலம் பணி முழுமை அடையும் என்பதால், பணியின் அவசியம் கருதி நகராட்சி பொறியாளர் அவர்களால், தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 15.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டியும், மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள உரிய அனுமதி வேண்டி, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு திட்டக்கருத்துரு அனுப்பி வைக்கவும், மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணியினை முழுமையாக முடிக்கும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 15.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம் , பணியினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் , சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் இருந்து உரிய அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் ,மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 789 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற கூடத்தில் சிறப்பு இலக்கு படை மற்றும் நக்கசல் தடுப்பு பிரிவு சார்பாக நடத்தப்பட கிராம தணிக்கையின் போது சின்ன மயிலாறு ,காணி குடியிருப்பு பகுதியில் பழங்குடியினர் கிராமத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக 25 LED விளக்குகள் வேண்டுமென கோரிக்கை வைக்கபட்டுள்ளத்தால் மேற்கண்ட கோரிக்கையினை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு,

**அலுவலகக்குறிப்பு**

கிராமத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக விளக்குகள் வேண்டுமென கோரிக்கை கருதி பணிகள் மேற்கொள்ள, தயார் செய்யப்பட்டுள்ள 25 LED விளக்குகள் மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.40 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வழங்கலாம், மேலும் இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 790 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9 791**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் விநியோக குழாயில் உடைப்புகள் ஏற்பட்டுளத்தால் குடிநீர் விநியோகம் தடைபடும் சூழ்நிலை ஏற்பட்டுளத்தால் இதனை கருத்தில் கொண்டு CID joints மூலம் உடைப்புகள்சரிசெய்யவேண்டி அவசியம் ஏற்பட்டுள்ளது.இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு மதிப்பீட் தொகை ரூ. 2.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு,

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் விநியோக குழாயில் உடைப்புகளை சரிசெய்ய வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வழங்கலாம், மேலும் இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 791 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் 2026-2027ம் ஆண்டிற்கு எதிர் வரும் பருவ மழை காலங்களை சமாளிக்கும் பொருட்டு, இந்நகர் பகுதியில் உள்ள மழை நீர் வடிகால்களை JCB இயந்திரம் மூலம் தூர்வாறும் பணி மேற்கொள்ளவும் மேலும் நகர்பகுதிகளில் முட்புதர்கள் மற்றும் இதர பணிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு அவசர அவசியம் கருதி பொதுசுகாதார பணி மேற்கொள்ள வேண்டி 2026-2027ம் ஆண்டிற்கு JCB மூலம் பணி மேற்கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரவிலை பட்டியலின் படி, விலை ரூ 973/- ( ஒரு மணி நேரத்திற்கு) நிர்ணயம் செய்த விலைக்கு பயன்படுத்திக்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண் 1965/2015/எச்1)

**அலுவலகக்குறிப்பு**

பருவ மழை காலங்களை சமாளிக்கும் பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரவிலை பட்டியலின் படி நிர்ணயம் செய்யப்பட்ட விலையின்

அடிப்படையில் JCB வாகனம் தேவைகேற்ப இயக்கவும், செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 792 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 11 793**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், நகர்பகுதிகளில் இயங்கி வரும் அம்மா உணவகங்களை மேம்பாடு செய்து பொது மக்களுக்கு தரமான மற்றும் சுகாதாரமான முறையில் உணவுகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக அருகாமையில் இயங்கி வரும் அம்மா உணவகத்தினை 20.05.2026 அன்று ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, ஆய்வு குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் படி அம்மா உணவகத்தினை பராமரித்து மேம்பாடு செய்யும் பொருட்டு, அம்மா உணவக வளாகத்தில் புதிய செல்ப், உணவகத்திற்கு செல்லும் வழி சரி செய்தல் மின் சாதனங்கள் சரி செய்தல் மற்றும் இதர மேம்பாடு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதின் படியும், பணியின் அவசியம் கருதியும், அம்மா உணவகத்தினை சீரமைத்தல் மற்றும் பராமரித்து மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம் பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர் நோக்கி , நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 793 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 12**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் திருமதி. பீனா வின்செண்ட் 97D/8 கோடிஸ்வரன் நகர், சேரன்மகாதேவி ரோடு, திருநெல்வேலி டவுன் என்பவர், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 , சர்வே புல எண் 485/34A1B ல் 3.02 ஏக்கரில் மனைப்பிரிவாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு துறை தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு நகராட்சி மூலம் உரிய அனுமதி வழங்கிடும் வகையில் பெறப்பட்ட விண்ணபத்தின் படி நகர் ஊரமைப்பு துறை விதிகளுக்குட்பட்டு அடிப்படை வசதிகளான சாலை , மழைநீர் வடிகால், குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் தெருவிளக்குகள் ஆகிய இனங்கள் விண்ணபதாரர் மூலம் மேற்கொண்டபின் அனுமதி வழங்கலாம் என இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 780 நாள் 26.02.2026 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.. அதன் அடிப்படையில் விண்ணப்பதாரர் திருமதி. பீனா வின்செண்ட் என்பவரால், மேற்கண்ட மனைப்பிரிவில் சாலை , மழைநீர் வடிகால், குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறார். அவ்வாறு அமைக்கப்படும் சாலையில், பொது மக்கள் நலன் கருதியும், ஆற்றல் சேமிப்பு மற்றும் மின் கட்டண சேமிப்பு நடவடிக்கைகளின் அடிப்படையிலும் , சூரிய ஒளியில் இயங்கும் ( Solar Light) மின் விளக்குகள் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண் 1806/2025/எப்1)

**அலுவலகக்குறிப்பு**

இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் . 780 நாள் 26.02.2026 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையில், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 , சர்வே புல எண் 485/34A1B ல் 3.02 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளில் ஒன்றான மின் விளக்குகளை , பொது மக்கள் நலன் கருதியும், ஆற்றல் சேமிப்பு மற்றும் மின் கட்டண சேமிப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் , சூரிய ஒளியில் இயங்கும் ( Solar Light) மின் விளக்குகள் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 794 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 13

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், நகர்பகுதிகளில் இயங்கி வரும் அம்மா உணவகங்களை மேம்பாடு செய்து பொது மக்களுக்கு தரமான மற்றும் சுகாதாரமான முறையில் உணவுகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக அருகாமையில் இயங்கி வரும் அம்மா உணவகத்தினை 20.05.2026 அன்று ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, ஆய்வு குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் படி அம்மா உணவக பயன்பாட்டில் உள்ள பாத்திரங்கள் மிகவும் பழமையானதாகவும், உபயோக படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அதனை மாற்றி புதிய பாத்திரங்கள் கொள்முதல் செய்யய அவசியமாகிறது. மேற்கண்ட பாத்திரங்களுக்குரிய விலைவிகிதங்கள் தமிழ்நாடு தரவிலை பட்டியலில் இல்லை என்பதால், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று அதில் , குறைவான விலைப்புள்ளியின் அடிப்படையில் கொள்முதல் செய்ய வேண்டி, நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**1.60** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதின் படியும், பணியின் அவசியம் கருதியும், அம்மா உணவகத்திற்கு தேவையான பாத்திரங்கள் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம் பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர் நோக்கி , நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 795 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஓம்/- S.P.M.செல்வசுரேஷ் பெருமாள்**
**நகர்மன்றத் தலைவர்**
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி